## 30.2 ஊராட்சி ஒன்றிய பணியமைப்பை சீரமைக்க வெளியிடப்பட்ட ஆணைகளில் சில மாறுதல்கள்

ஊரக வளர்ச்சி (இ5)துறை

அரசாணை (நிலை) எண். 206 நாள் : 28.9.1999

படிக்க :

1. ஊரக வளர்ச்சித் துறையின் நிலை எண். 93, நாள் 26.3.97 இட்ட அரசாணை.
2. ஊரக வளர்ச்சித் துறையின் நிலை எண். 180, நாள் 9.6.97 இட்ட அரசாணை.
3. ஊரக வளர்ச்சித் துறையின் நிலை எண். 186, நாள் 10.6.97 இட்ட அரசாணை.
4. ஊரக வளர்ச்சித் துறையின் நிலை எண். 230, நாள் 17.7.97 இட்ட அரசாணை.
5. ஊரக வளர்ச்சித் துறையின் நிலை எண். 361, நாள் 19.12.97 இட்ட அரசாணை.
6. ஊரக வளர்ச்சித் துறையின் நிலை எண். 34, நாள் 5.5.98 இட்ட அரசாணை.
7. ஊரக வளர்ச்சி இயக்குநரின் எண். 70774/97/பி1, நாள் 25.5.98 இட்ட கடிதம்.
8. ஊரக வளர்ச்சித் துறையின் நிலை எண். 249, நாள் 24.11.98 இட்ட அரசாணை.

**ஆணை**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ன்படி ஏற்படுத்தப்பட்ட மூன்றடுக்கு ஊராட்சிகள் நிர்வாக முறைக்கு ஏற்ப ஊராட்சி ஒன்றிய பணியமைப்பை எப்படி சீரமைக்கவேண்டும் என்பது குறித்த ஆணைகள் படிக்கப்பட்டவை. இரண்டு முதல் ஐந்து மற்றும் எட்டில் குறிப்பிட்டுள்ள அரசாணைகளில் வெளியிடப்பட்டன. கிராம ஊராட்சிகளுக்கு அளிக்கப்பட்ட பொறுப்புகளைக் கருத்தில் கொண்டு, படிக்கப்பட்டவை இரண்டில் குறிப்பிட்டுள்ள அரசாணைக்கு சில திருத்தங்கள் வெளியிட ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்தபின், கீழ்க்கண்டவாறு ஆணையிடுகின்றது:–

அ. விரிவாக்க அலுவலர் (கால்நடை வளர்ப்பு), விரிவாக்க அலுவலர் (கூட்டுறவு), விரிவாக்க அலுவலர் (ஆதிதிராவிடர் நலம்) ஆகியோர், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், மில்லியன் கிணறுகள் திட்டம், சாண எரிவாயு திட்டம் போன்று திட்டங்கள் சம்பந்தப்பட்ட பணிகளைச் செய்வதாலும், அப்பணிகள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) பொறுப்பின் கீழ் உள்ளதாலும் அவர்கள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் பணியாற்ற வேண்டும்.

ஆ. கிராம குடிநீர் திட்ட கையிறைப்பான்கள் மற்றும் விசையிறைப்பான்கள் மற்றும் தெருவிளக்குகள் பராமரிப்பு கிராம ஊராட்சிகளில் பொறுப்பு என்பதால், ஊராட்சி ஒன்றிய அளவில் உள்ள பொருத்துநர்கள், மின்பணியாளர்கள் மற்றும் மின்பணியாளர்களின் உதவியாளர்கள் ஆகியோர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) நிர்வாகக் கட்டுப்பாட்டில் பணியாற்ற வேண்டும்.

இ) கிராம ஊராட்சிகள் பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட ஒரு இளநிலை உதவியாளர் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து ஊதியம் பெறுபவர் என்பதால், அப்பணியிடத்தை வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) கட்டுப்பாட்டில் உள்ள பிரிவுக்கு திருப்பி அளிக்கவேண்டும். அதற்கு பதிலாக, தற்பொழுது வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) கட்டுப்பாட்டில் உள்ள, அரசு நிதியிலிருந்து ஊதியம் அளிக்கப்படும் ஒரு உதவியாளர் பணியிடத்தை வட்டார வளர்ச்சி அலவலர் (கிராம ஊராட்சிகள்) பிரிவுக்கு அளிக்க வேண்டும்.

ஈ) வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) கட்டுப்பாட்டில் ஏற்கனவே ஒரு தட்டச்சர் பதவி உள்ளதாலும், அதற்கு ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து ஊதியம் வழங்கப்படுவதால், அரசாணை நிலை எண். 186, ஊ.வ. நாள் 10.6.97–ல் அனுமதிக்கப்பட்டட கூடுதல் தட்டச்சரை (அதற்கு ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து ஊதியம் வழங்கப்பட்டாலும்), ஏற்கனவே தட்டச்சர் பதவி இல்லாத வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) நிர்வாக கட்டுப்பாட்டில் பணியாற்ற ஆணையிடப்படுகின்றது.

உ) அரசு நிதியிலிருந்து ஊதியம் வழங்கப்பட்டு வருவதால் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) கட்டுப்பாட்டில் உள்ள வாகன ஓட்டுநர் பணியிடங்களை தற்பொழுது வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) நிர்வாகக் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்படுகிறது. அரசாணை நிலை எண் 230, ஊ.வ. , நாள் 17.7.97 மற்றும் அரசாணை நிலை எண். 361 , ஊ.வ., நாள் 19.12.97 ஆகியவற்றில் ஊராட்சி ஒன்றிய

பொது நிதியிலிருந்து செலவு மேற்கொண்டு ஏற்படுத்த அனுமதிக்கப்பட்ட வாகன ஓட்டுநர் பணியிடங்கள் தொடர்ந்து வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) நிர்வாகக் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும்.

3. மேற்கண்ட ஆணைகளுக்கு ஏற்ப பார்வை இரண்டில் குறிப்பிட்டுள்ள அரசாணை திருத்தப் பெறுகின்றது என்று ஆணையிடப்படுகிறது.

4. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண். 2779/ FSP/99, நாள் 6.8.99ன் இசைவு பெற்று வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்